


16. 06. 2025

தலைப்பு செய்திகள்

- இந்தியா - சைப்ரஸ் நாடுகளுக்கு இடையிலான நட்புறவு புதிய உச்சங்களை எட்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- நாடுமுழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த 90 நாட்களில் பேரிடர் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அறிவுறுத்தியுள்ளார்.
- தமிழ்நாட்டில் 8 லட்சம் விவசாயிகளுக்கு கார், குறுவை, சொர்ணவாரி சாகுபடி திட்டத்தின் கீழ் சிறப்பு தொகுப்பு வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- திருவண்ணாமலை நந்தன் கால்வாய் திட்டத்தை செயல்படுத்த முதல்கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் கூறியுள்ளார்.
- சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுத்திக்கு முந்தைய சுற்றில் சுமித்நாகல் - AlanWazny ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியா - சைப்ரஸ் நாடுகளுக்கு இடையிலான நட்புறவு இனிவரும் காலங்களில் புதிய உச்சங்களை எட்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சைப்ரஸ் அதிபர் நிக்கோஸ் கிறிஸ்டோ டவ்லிடஸ் உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்ட பின்னர் இதனை தெரிவித்த பிரதமர், சர்வதேச அமைதி மற்றும் நிலைத்தன்மைக்கு இருநாடுகளும் ஒருங்கிணைந்து தொலைநோக்கு பார்வையுடன் செயலாற்றும் என்றார்.

சைப்ரஸ் நாட்டின் உயரிய விருதான Maccarios – III பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு அந்நாட்டு அதிபர் வழங்கி கவுரவித்தார்.

இந்த விருதிற்கு நன்றிதெரிவித்த பிரதமர் 140 கோடி இந்திய மக்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

நம்நாட்டின் கலாச்சார ஒருங்கிணைப்பு மற்றும் உலகம் ஒரேகுடும்பம் என்ற உணர்விற்கும், நாட்டுமக்களின் வலிமை மற்றும் விருப்பங்களுக்கும் மரியாதை செலுத்தும் வகையிலும், இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

முன்னதாக நிக்கோஷியா அதிபர் மாளிகைக்கு வருகை தந்த பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு அந்நாட்டு பாரம்பரிய வழக்கப்படி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது சைப்ரஸ் பயணத்தை முடித்துக்கொண்டு, 2-வது கட்டமாக, ஜி-7 நாடுகளின் வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இன்று கனடா புறப்படுகிறார்.

❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாடுமுழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த 90 நாட்களில் பேரிடர் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் பேரிடர் மீட்புப்படை ஆணையர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், பேரிடர்களை எதிர்கொள்ள மாவட்ட அளவில் மேலாண்மை திட்டம் மிகவும் அவசியம் என்று சுட்டிக்காட்டினார்.

உயிரிழப்பு இல்லாத நிலை என்ற இலக்கை நோக்கி அரசு பயணிப்பதாக கூறிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் திறன், வேகம், துல்லியம், வலிமை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இயற்கை பேரிடர் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றம், உலக வெப்பமயம் காரணமாக இயற்கை சீற்றங்கள் அதிகரிப்பது குறித்து உலக நாடுகள் கவலை கொண்டுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

பேரிடர் மேலாண்மை களத்தில் இந்தியா முன்னோடி நாடாக உருவாகும் நிலையில் உள்ளதாகவும் திரு. அமித்ஷா குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

கணக்கெடுப்பு

நாட்டின் 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான அறிவிக்கையை மத்திய அரசு இன்று வெளியிட்டது.

இதன்படி லடாக், ஜம்முகாஷ்மீர் யூனியன் பிரதேசங்கள், ஹிமாச்சல பிரதேசம், உத்ரகாண்ட் மாநிலங்களை தவிர்த்து ஏனைய பகுதிகளில் 2027-ம் ஆண்டு மார்ச் ஒன்றாம் தேதிமுதல் கணக்கெடுப்பு தொடங்க வகை செய்யப்பட்டுள்ளது.

லடாக், ஜம்முகாஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளுக்கு அடுத்த ஆண்டு அக்டோபர் ஒன்றாம் தேதி சென்செஸ் தொடங்கும்.

நாட்டின் சுதத்திரத்திற்கு பின்னர் நடத்தப்படும் 8-வது கணக்கெடுப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

செவிலியர்

நாட்டில் செவிலியர் அதிகாரி தேர்வுக்கான பொது நுழைவுத்தேர்வு NORCET இனி ஆண்டுதோறும் இருமுறை நடத்தப்படும் என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் இந்த தேர்வுமுறை நடைமுறைப் படுத்தப்பட்டு நோயாளிகளுக்கு தொடர் சேவைகள் உறுதி செய்யப்படுகிறது.

எய்ம்ஸுடன் இணைந்து மத்திய சுகாதார அமைச்சகம் இதற்கான முடிவை மேற்கொண்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

ஈரான் - இஸ்ரேல்

ஈரான் - இஸ்ரேல் நாடுகளிடையே நடைபெறும் சண்டை நான்காவது நாளை எட்டியுள்ள நிலையில் ஏவுகணை தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இந்த சம்பவத்தில் ஈரானில் 200-க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்ததோடு, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் 8 லட்சம் விவசாயிகளுக்கு கார், குறுவை, சொர்ணவாரி சாகுபடி திட்டத்தின் கீழ் சிறப்பு தொகுப்பு வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தஞ்சையில் 635 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்த திட்டப்பணிகளை இன்று தொடங்கி வைத்ததுடன், புதிய திட்டப்பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி பேசியஅவர், தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களை பட்டியலிட்டார்.

.. வாய்ஸ் ..

இந்நிகழ்வில் 588 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் பயனாளிகளுக்கு முதலமைச்சர் வழங்கினார்.

முன்னதாக பல்வேறு வழித்தடங்களில் போக்குவரத்துறை சார்பில் புதிதாக 52 மினி பேருந்து சேவைகளையும் முதலமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖

நெல்லை முத்து

இஸ்ரோ முன்னாள் அறிவியலாளர் நெல்லை முத்துவின் மறைவிற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தமது ஆறுதலை முதலமைச்சர் தெரிவித்துக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

துரைமுருகன்

திருவண்ணாமலை நந்தன் கால்வாய் திட்டத்தை செயல்படுத்த முதல்கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாக, மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் 18 வழித்தடங்களுக்கான மினி பேருந்து சேவையை இன்று துவக்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், இதற்கான பணிகள் விரைவில் துவக்கப்படும் என்றார்.

அரசின் நலத்திட்டங்கள் அனைத்து பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில் அதிகாரிகள் செயல்பட அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

உதயநிதி

தேனி மாவட்டத்தில் நடைபெறும் வளர்ச்சித்திட்ட பணிகளை விரைந்து முடிக்குமாறு, துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின், துறைசார்ந்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தேனியில் இன்று நடைபெற்ற அரசுத்துறை அதிகாரிகளுடனான ஆய்வுக்கூட்டத்தில் அவர் பேசினார்

வருவாய், வேளாண்மை, கூட்டுறவு உள்ளிட்ட துறைகளில் சுமார் 800க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 13 கோடியே 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

விஸ்வநாததாஸ்

வெள்ளை கொக்கு பறக்குதடி பாப்பா ! என்ற பிரபலமான தமிழ் பாடலை இயற்றிய விடுதலை போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸின் பிறந்தநாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மதுரை திருமங்கலத்தில் அன்னாரது நினைவு இல்லத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தேசபக்தி பாடல்கள் மற்றும் நாடகத்தின் மூலமாக மக்களிடம் தேசப்பற்றை ஊக்குவித்த அவர், நாட்டின் விடுதலைக்காக 29 முறை சிறை சென்றவராவார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டம் அரசலூரில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்தோ - திபெத் எல்லை பாதுகாப்பு படையினர், பள்ளி மாணாக்கருக்கு யோகப்பயிற்சிகளை கற்பித்தனர்.

திருச்சி மணப்பாறையை அடுத்த மரவனூர் பெரியகுளத்தில் மீன்பிடி திருவிழா இன்று நடைபெற்றது.

3 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற்ற இவ்விழாவில் அப்பகுதியை சேர்ந்த மக்கள் கட்லா, விரால், கெழுத்தி உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்களை பிடித்து சென்றனர்.

❖❖❖❖❖❖❖

அணைகள்

கோவை பில்லூர் அணை நடப்பாண்டில் 2-வது முறையாக நிரம்பியதை அடுத்து, 14 ஆயிரம் கனஅடி தண்ணீர் பவானி ஆற்றில் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பொள்ளாச்சி ஆனைமலை, வால்பாறை பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

அதேபோல் முல்லைபெரியாறு அணையில் நீர்பிடிப்பு பகுதிகளில் நீர்வரத்து 3 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

நெல்லை

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக நெல்லை பாபநாசம் அணையின் நீர்மட்டம், ஒரே நாளில் 4 அடி உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

ஆழியாறு கவி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் அங்கு குளிக்க தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

போலந்தில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுத்திக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் - போலந்தின் AlanWazny உடன் இன்று மோதவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆண்டர்சன் டென்டுல்கர் கோப்பை முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரும் 20-ம் தேதி லண்டன் லீட்ஸில் தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரின் 2-வது போட்டி அடுத்தமாதம் 2-ம் தேதி பர்மிங்ஹாமில் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

லண்டனில் நடைபெறும் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் தகுதிச்சுற்றின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, பெல்ஜியத்தின் சாண்டர் கில்லி இணை – பிரிட்டன் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖